**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI**

**S.C.No. 9/2021**

**PROSECUTION WITNESS No - PW-6**

**Name :** கார்த்திகேயராஜா **Caste:**

**Husband Name:** **Calling:**

**Village:** **Religion:**

**Taluk:** **Age:**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of June 2024.**

2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u> :

1. நான் மேலவாணியன்குடியில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.03.2019 ம் தேதி அன்று கிராம நிர்வாக அலுவலர் சுரேஷ் என்பவர் தனது அலுவலகத்தில் இருந்த போது சிவகங்கை நகர காவல் நிலையத்தில் இருந்து அவர் தொலைபேசியில் அழைப்பு வந்து ஒரு வழக்கு சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டி சாட்சியாக இருக்குமாறு அழைத்தார்கள். காலை 8.00 மணிக்கு நானும் எனது கிராம நிர்வாக அதிகாரியான சுரேஷிம் சிவகங்கை நகர காவல் நிலையத்திற்கு சென்றோம். அப்போது காவல் நிலையத்தில் 3 எதிரிகள் இருந்தார்கள். அந்த மூவரையும் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். விஜயபாண்டி என்பவர் ஆய்வாளர் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் கொடுத்தார் என்று எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. அந்த வாக்குமூலத்தை போலீசார் கையால் எழுதிக்

கொண்டார்கள். அந்த வாக்குமூலம் எவ்வளவு பக்கங்கள் என்று எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை.

2. 12.00 முதல் 12.30 மணி அளவில் வாக்குமூலத்தில் கடைசியாக கையெழுத்து போட்டோம். மானாக்குடி மதுரை ரோட்டில் வந்து வண்டி நிற்பதாகவும் அங்கு தனது ஆட்டோவை அடையாளம் காண்பிப்பதாகவும் சொன்னதன் பேரில் 10.45 மணிக்கு அங்கு சென்றோம். பயணிகள் ஆட்டோ ஒன்று அங்கிருந்ததை பார்த்தோம் . அந்த வண்டி நம்பர் சொல்ல முடியுமா அந்த வண்டி நம்பர் ஞாபகம் இல்லை. அந்த ஆட்டோவை போலீசார் கைப்பற்றினார்கள். அந்த ஆட்டோவிற்குள் அவர்கள் அணிந்திருந்த கைலி மற்றும் சட்டை மற்றும் கொலைக்கு பயன்படுத்திய உடைந்த பீர் பாட்டில் ஆகியவற்றை ஆட்டோவின் பின் சீட்டுக்கு முன்னால் ஒரு இடத்தில் மறைத்து வைத்திருந்தார்கள். அதையும் போலீசார் கைப்பற்றினார்கள்.

3. கைப்பற்றுவதற்கான அத்தாட்சி போலீசார் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கப்பட்ட பகுதி அரசு தரப்பு சார்ந்தவனம் 4. கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.5 மற்றும் 6. அடிபாகம் உடைந்த பீர் பாட்டில் ஒன்று போலீசார் கைப்பற்றினார்கள். அடிப்பாகம் உடைந்த பீர் பாட்டில் போலிசார் கைப்பற்றினார்கள். 2 கைலி, 2 சட்டை, ஒரு வேஷ்டி கைப்பற்றினார்கள். அது மட்டுமல்லாமல் ஆட்டோவையும் கைப்பற்றினார்கள். நான் மொத்தம் 2 கையொப்பம் தான் செய்தேன். அந்த பொருட்களை தற்போது என்னால் அடையாளம் சொல்ல முடியும். உடைந்த பீர் பாட்டில் ச.பொ.7. ஆட்டோ சா.பொ.3 புகைப்படம் வாயிலாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆட்டோ காவல் நிலைய கட்டுப்பாட்டில் உள்ளது. அவர் அணிந்திருந்த கைலி, சட்டையை என்னால்

தற்போது அடையாளம் காட்ட முடியாது. அதே போல் வேட்டி சட்டையையும் என்னால் அடையாளம் காட்ட முடியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் எங்களை விசாரிக்கவில்லை.

**<u>2 ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1. போலிசார் எங்களை அழைத்தபோது எதிரிகளை எங்கு வைத்து கைது செய்தார்கள் என்ற விபரம் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எப்படி விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் விசாரித்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் விசாரித்தார் என்றால் ஆய்வாளர் விசாரித்தார். கைப்பட எழுதிய வாக்குமூலம் போலிசாரால் எழுதப்பட்டது. யார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. அவரது பதவியும் சொல்ல முடியாது. கைப்பட எழுதிய வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேன். அது மட்டுமல்லாமல் பிரிண்ட்அவுட் எடுத்த வாக்குமூலத்திலும் கையெழுத்து செய்தேன். கைப்பற்றுதல் மகஜரும் காவல் நிலையத்தில் வைத்துதான் பிரிண்ட்அவுட் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்துதான் கையொப்பம் செய்யப்பட்டது. மானாகுடி ரோடு ஆள் நடைமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து போடும் போது காவல் நிலையத்தில் சுமார் 11.00 மணி இருக்கும். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.7 பீர் பாட்டிலில் கீழ்ப்பாகம் உடையவில்லை என்றால் சரிதான்.

2. மேற்கண்ட பாட்டிலை போலிசார் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை. சம்பவம் நடந்த இடம் எங்களது ஆளுகைக்கு உட்பட்ட பகுதி அல்ல என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் என்னை அழைத்ததின் பேரில் நான் அந்த இடத்திற்கு சென்றேன். நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில்

காவல் நிலையத்தில் வைத்து முதல் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றும் அதனடிப்படையில் மானாகுடிக்கு சென்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. 2,3 எதிரிகள் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் எங்கள் முன்னிலையில் எந்த பொருட்களையும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் அரசு அலுவலர் என்பதால் ஏற்கனவே போலிசாரால் காவல் நிலையத்தில் தயாரித்து வைத்திருந்த வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3ம் எதிரி மேற்கண்ட குறுக்குவிசாரணையை தனது குறுக்குவிசாரணையாக ஏற்றுக்கொள்கிறார்.**

**<u>மறுவிசாரணை</u>:** இல்லை.

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.07.25 15:00:26 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை